# அலகு - 1

**பாதசாரிகளுக்கான பாதுகாப்பு விதிகள் - மிதிவண்டி ஓட்டுவாருக்கான விதிமுறைகள் - பொதுவான விதிமுறைகள்.**

## இரண்டு மதிப்பெண் வினா - விடைகள்

**1. பாதசாரிகள் என்பது யாது?**

சாலையில் நடந்து செல்லும் மனிதன் மற்றும் ஆடு, மாடு போன்ற விலங்கினங்கள் யாவும் பாதசாரிகள் என்றழைக்கப்படுகின்றனர்.

**2. நடைபாதைகள் என்பது யாது?**

சாலையில் மக்கள் நடப்பதற்கென தனியாக ஒதுக்கி விடப்பட்ட வழி நடைபாதை ஆகும். மக்கள் இந்த நடைபாதையில் செல்வதே பாதுகாப்பானது.

**3. பொதுமக்கள் நிற்கக்கூடாத இடங்கள் யாவை?**

போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சாலைகளில் பரவலாகப் பலர் ஒன்றாகச் சேர்ந்தோ, கைகோர்த்துக் கொண்டோ நடக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் போக்குவரத்திற்கு இடையூறு நேருவதுடன், விபத்துக்களும் நேரலாம். வாகன ஓட்டிகள் காணவியலாத திருப்பங்களில் எப்போதும் நிற்கக்கூடாது. ஊர்திகள், கார்கள் போன்ற வாகனங்களின் பின்னாலும், மாட்டுவண்டி, குதிரை வண்டி போன்றவற்றின் பின்னாலும் நிற்கக் கூடாது.

**4. சாலையைக் கடக்கக் கூடாத இடங்கள் யாவை?**

அசையாமல் நின்று கொண்டிருக்கும் வாகனத்தின் பின்புறமிருந்து சாலையைக் கடக்கக்கூடாது. அவ்வாறு கடக்கையில் எதிரில் வரும் வாகன ஓட்டிக்கு நீங்கள் வருவது குறித்த நேரத்தில் தெரியாததால் வாகனத்தை நிறுத்த முடியாமல் விபத்து நேரலாம்.

**5. வரிக்குதிரை என்பது யாது?**

நகர சாலைகளில் பாதசாரிகள் சாலையை கடப்பதற்காக போடப் பட்டுள்ள கோடிட்ட இடங்களுக்கு வரிக்குதிரை என்று பெயர்.

ஆகும்.

**பச்சை ஒளி விளக்கு (Green Signal) என்பது யாது?**

மனிதன் சாலையைக் கடக்கப் பயன்படுத்தப்படுவது பச்சை ஒளி விளக்கு ஆகும். வரிக்குதிரை கோடிட்ட இடத்தில், கடந்து செல்லலாம் என்பதற்கான விளக்கு சைகை கிடைத்த பிறகு உடனே விரைவாகச் சாலையைக் கடந்து சென்றுவிட வேண்டும்.

**வாகனத்திலிருந்து இறங்குவது எங்ஙனம்?**

ஓடிக் கொண்டிருக்கும் வாகனங்களிலிருந்து இறங்கவோ, ஏறவோ கூடாது. இவ்வாறு இறங்குவது உயிருக்கு ஆபத்து. முறையாக வண்டி நின்றபின் இடது புறமாக இறங்க வேண்டும். மாறாக வலது புறம் இறங்கக் கூடாது.

**பிராணிகளை சாலையில் எவ்வாறு அழைத்துச் செல்ல வேண்டும்?**

ஒரு பிராணியை உங்கள் வசம் வைத்திருந்தால் அது உங்கள் கட்டுப்பாட்டிற்கு மீறாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஒரு பிராணியின் மீது வாகனம் மோதாமலிருப்பதற்காக ஓட்டுநர் வாகனத்தை வேறு பக்கம் திருப்ப, அதனால் விபத்துக்கள் நேர்ந்து அதன் விளைவால் பலர் இறக்க நேரிடுவதும் உண்டு.

). **வாகன ஓட்டிகள், வாகனத்தை எடுப்பதற்கு முன் கவனிக்க வேண்டியவை யாவை?**

வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களைச் சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். வாகனத்தை ஓட்டத் துவங்கும் முன் டயர்களையும், தடைச் சாதனங்களையும் (Break) சரியான முறையில் பரிசோதித்துவிட்டு வாகனத்தை எடுக்க வேண்டும்.

**வேண்டும்?**

வாகனத்தின் நிலை, சாலையின் நிலை, காலநிலை, சாலையில் போக்குவரத்து நிலை இவற்றிற்கேற்ப செல்லும் வேகத்தை நிர்ணயித்துக் கொள்ள வேண்டும்.

**2. வாகன ஓட்டிகள் 'கியரை' எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?**

வாகனத்தைச் செலுத்தத் துவங்கும்போது முதல் கியரில் ஓட்டத் துவங்கி போக்குவரத்து நிலைக்கேற்ப படிப்படியாக அதிகரிக்க வேண்டும். முதல், இரண்டாம் கியரில் அதிக தூரம் வாகனத்தை ஓட்டுவதையும், அடிக்கடி கியரை மாற்றுவதையும் தவிர்க்க வேண்டும்.

**3. வாகன ஓட்டிகள் வேகத்தை - எவ்வாறு குறைக்க வேண்டும்?**

அவசரமான நிலைகளில் வாகனத்தை நிறுத்த வேண்டியிருந்தால், முதலில் வேகமாக, 4, 3, 2, 1 என கியர்களைக் குறைத்து, பின்புறம் வரும் வாகனங்களைக் காட்டும் கண்ணாடியைப் பார்த்து நிற்பதற்கான சைகை செய்து பின்னர் நிற்கவேண்டும்.

**14. வாகன ஓட்டிகள் கவனிக்க வேண்டியன யாது?**

வாகன ஓட்டிகள் எக்காரணத்தைக் கொண்டும் வேகத்தடை எச்சரிக்கைகளையோ, போக்குவரத்து காவல் துறையினரின் சைகைகளையோ மீறக்கூடாது.

**15. சாலையில் வாகனங்களுக்கிடையிலான இடைவெளி எவ்வளவு?**

முன்னால் செல்லும் வாகனத்திற்கும், பின்னால் செல்லும் வாகனத்திற்கும் இடையே செல்லும் வேகத்திற்கேற்ப 15. கி.மீ வேகத்திற்கு ஒரு வாகன இடைவெளி என்ற அடிப்படை இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக 60 கி.மீ வேகமாக இருந்தால் நான்கு வாகன இடைவெளி இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

**16. மெதுவாகச் செல்ல வேண்டிய இடங்கள் எவை?**

பள்ளிகள், பேருந்து நிற்குமிடங்கள், பாதசாரிகள் சாலையைக் கடக்கும் இடங்கள் ஆகியவற்றின் அருகே செல்லுகையில் மெதுவாகவும் கவனமாகவும் செல்ல வேண்டும்.

**17. வாகனத்தை நிறுத்துவதற்கு முன் எவ்வளவு தூர இடைவெளியில் சைகையை காட்ட வேண்டும்?**

சாலைச் சந்திப்புகளிலோ அல்லது திரும்புமிடங்களிலோ நின்று செல்லும்போது நிற்கும் இடத்திற்கு 30 மீட்டர்கள் முன்பே இதற்கான சைகை செய்ய வேண்டும்.

**18. வாகனத்தை எங்கெல்லாம் முந்தக் கூடாது?**

பாதசாரிகள் கடக்கும் இடங்கள், சாலை சந்திப்புகள், சாலை திருப்பங்கள், மலைபாதை, பாலங்கள், குறுகிய சாலைகள், முந்த தடை செய்யப்பட்ட இடங்கள் ஆகிய இடங்களில் முன்னால் செல்லும் வாகனத்தை முந்தக்கூடாது.

**19. வழி விடவேண்டிய வாகனங்கள் எவை?**

தீயணைப்புப் படைவாகனம், நோயாளிகளை ஏற்றிச்செல்லும் வாகனம் (ஆம்புலன்ஸ்), செஞ்சிலுவை வாகனங்கள், காவல்துறை வாகனங்கள் போன்றவை முந்திச் செல்ல வழி கேட்டால் அவற்றிற்கு வழிவிட்டு இடதுபுறமாக ஒதுங்க வேண்டும்.

**20. அறிவிப்புப் பலகை என்பது யாது?**

சாலையில் வேகத்தடை, குறுகிய வளைவு, சிறிய சாலை பிரதான சாலையுடன் இணையுமிடம், பள்ளம், பாலம், சுரங்கப்பாதை ஆகிய இடங்களில் அறிவிப்புப் பலகை வைத்தால் வாகன ஓட்டிகளுக்கு உதவியாக இருக்கும்.

**21. சாலைத் திட்டை (Traffic Island) எவ்வாறு கடக்க வேண்டும்?**

சாலைத் திட்டைச் சுற்றிச் செல்லத் துவங்கும் முன்போ அல்லது வலது, இடது பக்கங்களில் திரும்பும் முன்போ, முதல், இரண்டாம் கியருக்கு வந்து வட்டப் பாதையைச் சுற்றி முடித்ததும் அல்லது வலது இடப் பக்கங்களில் திருப்பியதும் படிப்படியாகக் கியரை அதிகரித்துச் செல்ல வேண்டும். திரும்பும்போது அல்லது வட்டப்பாதையில் சுற்றும்போது கியரை மாற்றக்கூடாது.

**22. வாகன ஓட்டிகள் இரவில் விளக்கு வெளிச்சத்தை எவ்வாறு இடவேண்டும்?**

**23. பிரதான [illegible] இடங்கள் யாவை?**

நகரங்கள், பெருநகரங்கள் ஆகியவற்றில் உள்ள வெளிச்சம் நிறைந்த சாலைகளிலும் தெருக்களிலும் குறைந்த வெளிச்சமுள்ள விளக்கையே பயன்படுத்த வேண்டும். பெரு நகரங்களில் சில இடங்களில் பிரதான விளக்கினைப் (Head Light) பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கும்.

**24. விளக்கைப் பயன்படுத்தும் எல்லை யாது?**

நெடுஞ்சாலைகளில் செல்லும்போது 560 அடி தூரத்தில் எதிரில் வாகனங்கள் வரும்போது பிரதான விளக்கில் உள்ள அதிக வெளிச்சத்திற்கான பல்பையும், இடையில் உள்ள தூரம் 200 அடியும், அதற்குக் குறைவாக ஆகும்போது குறைந்த வெளிச்சத்திற்கான பல்பையும் பயன்படுத்த வேண்டும்.

**25. எதிரில் வரும் வாகனத்தின் விளக்கு கண்ணைப்பறித்தால் என்ன செய்ய வேண்டும்?**

எதிரில் வரும் வாகனத்தின் பிரகாசமான விளக்கால் உங்கள் கண்கள் கூசுமானால் நேரடியாக அவ்விளக்குகளைப் பார்ப்பதைத் தவிர்த்து எதிரில் உள்ள சாலையின் இருபுறங்களையும் பாருங்கள். இவ்வாறு செய்வதன் மூலம் எதிரில் வரும் வாகனத்தின் நிலையை அறியலாம்.

**26. இரவில் வாகனத்தை எவ்வாறு நிறுத்த வேண்டும்?**

இரவில் வாகனத்தைச் சாலையில் நிறுத்திவிட்டுச் செல்ல நேர்ந்தால், முன்புறம் அதற்கான சிறு விளக்குகளையும் (Parking lights) பின்புறம் சிவப்பு விளக்குகளையும் எரியும்படி செய்து நிறுத்திச் செல்ல வேண்டும்.

**27. மது அருந்திவிட்டு வாகனத்தை ஓட்டுவதால் ஏற்படும் விளைவு யாது?**

மது அருந்திய ஒருவருக்குப் போதையேறும் முன்பே கண்பார்வை பாதிக்கப்படுகிறது. குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டும்போது கண் வேலை செய்யும் திறமையில் 32 விழுக்காட்டை இழந்து விடுகிறது. இதனால் சாலையின் இரு புறங்களிலும் பார்வையை செலுத்த முடியாமல் விபத்து ஏற்பட்டு உயிரை மாய்க்கிறது.

## ஐந்து மதிப்பெண் வினா - விடைகள்

**1. குழந்தைகளும் சாலை பாதுகாப்பும் குறித்து விவரி.**

குழந்தைகளுடன் அல்லது குழந்தைகள் சாலையைப் பயன்படுத்து கையில் அதிக கவனத்துடன் இருப்பது அவசியம். சாலை விதிகளை அறியாத அவர்களால் பல விபத்துகள் நேருகின்றன. உங்கள் குழந்தை களுக்கும், உங்களைச் சார்ந்தோரின் குழந்தைகளுக்கும் விபத்து நேர இடமின்றி, சாலைகளைப் பயன்படுத்தும் முறைகளைக் கற்றுக்கொடுக்க வேண்டும். வெளியில் அவர்களை உலவ அழைத்துச் செல்லும்போதும், சாலைகளில் அழைத்துச் செல்லும்போதும் அந்தந்த இடங்களில் அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்து வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் விளக்கம் அளிக்க வேண்டும். சாலையை கடக்கும் முறைகள், போக்குவரத்துக் காவலர் காட்டும் சைகைகள், சாலைகளில் உள்ள அறிவிப்பு பலகைகள் ஆகியவை குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறவேண்டும்.

குழந்தைகளைப் போக்குவரத்து உள்ள இடங்களில் விளையாட அனுமதியாதீர்கள். சாலையில் நீங்கள் இடப்புறமாகச் செல்கையில் குழந்தைகளின் கையைப் பிடித்து அழைத்துச் செல்ல வேண்டும். அதேபோல சாலையின் வலப்புறமாக நடந்தால் குழந்தையை உங்களுக்கு வலப்புறமாக இருக்குமாறு அழைத்து செல்லுங்கள் ஐந்து வயதுக்கு குறைவான குழந்தைகள் சாலையில் தாங்கள் சந்திக்கும் ஆபத்தையோ, வாகனங்களின் வேகத்திற்கும் இடைவெளிக்கும் இருக்கும் தொடர்பையோ அறிந்திருக்க மாட்டார்கள். எனவே சாலையில் குழந்தையுடன் செல்லும் போது சிறு குழந்தையாக இருந்தால் தூக்கிச் செல்வதும் வளர்ந்த குழந்தையாக இருந்தால் கையை கெட்டியாகப் பிடித்து அழைத்துச் செல்வதும் மிகவும் அவசியம் ஆகும்.

**2. பனிமூட்டம் பனிப்பொழிவு காலங்களில் வாகனம் ஓட்டும் முறையை விவரி?**

பனி மூட்டம் நிறைந்த நேரங்களில் வாகனத்தை ஓட்டிச் செல்கையில் வாகனத்தின் விளக்கொளி பனிமூட்டத்தில் பட்டு, பிரதிபலிப்பது நமது கண்ணையே கூசச் செய்யும். பிரதான விளக்கின் ஒளி குறைவான பல்பையே பயன்படுத்த வேண்டும். சாலையின் விளிம்புகளைப் பார்க்க வேண்டும். பாதுகாப்பான பயணத்திற்கு அது வழிவகுக்கும். விளக்குகளைப் பயன்படுத்தினாலும் பனிமூட்டம் காரணமாகச் சாலையில் உள்ளவற்றைத் தெளிவாகக் காண இயலாமலும், முன்னேயுள்ள

ாகனத்திற்கும் உங்கள் வாகனத்திற்கும் உள்ள இடைவெளியைச் சரியாக ிர்ணயிக்க இயலாமலும் இருக்கும். எனவே, மெதுவாக செல்ல வேண்டும். ீங்கள் செல்லும் சாலையில் பனிமூட்டத்தின் அடர்த்தி இடத்திற்கு இடம் மாறுபடலாம். அதற்கேற்ப வேகத்தை அமைத்துக் கொள்வதுடன் நிலைக்குத் தக்கவாறு உடனே செயல்படத் தயாராக இருக்க வேண்டும். பனிமூட்டம் அதிகமாக இருந்தால் அது நீங்கும் வரை மிக அவசரமாக இருந்தாலன்றி வாகனத்தை ஓட்டாமலிருப்பது நல்லது.

பனிப்பொழிவு உள்ளபோதும் சாலை சரியாகத் தெரியாது. எனவே பிரதான விளக்கைப் பயன்படுத்த வேண்டும். சாலையில் உள்ள குறியீடுகளைப் பனி அடிக்கடி மறைக்கலாம். அதனால் வாகன ஓட்டி சாலையின் ஓரங்களைத் தாண்டியோ, பிற வாகனங்களுக்கு நெருக்கமாகவோ வாகனத்தை ஓட்ட நேரலாம்.

திரும்பவும், நிற்கவும் பயன்படும் நேரம் அதிகமாக இருக்கும். சாலைக்கும் சக்கரங்களுக்கும் இடையே உள்ள பனியினால் உடனே வாகனத்தை நிறுத்த இயலாது செல்லும் சாலை வழுக்கக்கூடும். எனவே மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும்.

**3. உங்கள் வாகனம் விபத்திற்குள்ளானால் நீங்கள் செய்ய வேண்டியது யாது?**

விபத்து நேர்ந்ததும் பயந்துவிடக்கூடாது. வண்டியைத் தனியாக விட்டுச் செல்லாமல் அதற்குக் காவலாக ஒருவரை நிறுத்த வேண்டும். காவல்துறையினர் அனுமதிக்கும்வரை வாகனத்தை அங்கிருந்து அகற்றக் கூடாது.

விபத்தில் வாகனத்தில் இருப்போருக்கோ, மற்றவர்களுக்கோ காயமோ, மரணமோ, சொத்து சேதமோ ஏற்பட்டிருந்தால் விபத்து நேர்ந்த 24 மணிநேரத்திற்குள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் காப்பீட்டு சான்றுகளுடன் தெரிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யவும் சரியான மருத்துவ உதவி கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்.

வேறொரு வாகனத்துடன் மோதியிருந்தால் அதன் ஓட்டுநரின் பெயர் முகவரி, வாகனத்தின் பதிவு எண் போன்றவற்றையும், வாகனத்தின் உரிமையாளரின் பெயர், முகவரி, காப்பீடு செய்திருப்பது தொடர்பான விவரங்களையும் குறித்துக் கொள்ள வேண்டும்.

வாகனம் காப்பீடு செய்யப்பட்டிருந்தால் அதை சீர்செய்யும் செலவையும், வாகனத்தைப் பணிமனைக்கு எடுத்துச் சென்று திரும்பவும் ஆகின்ற தொகையையும் காப்பீட்டு நிறுவனம் ஏற்கும். மிகக் குறைந்த சேதமாக இருந்தால் காப்பீட்டு நிறுவத்தினிடம் செலவைக் கேட்காமலிருப்பதே நல்லது. ஏனெனில் உதவித்தொகை பெறுவதற்கான ஊக்குவிப்புத்தொகை கிடைக்காமல் போய்விடும். சேதம் அதிகமாக இருந்தால் மட்டுமே காப்பீட்டு நிறுவனத்திடம் உடனே தெரிவிக்க வேண்டும். சந்தா எண்ணையும், பிற விவரங்களையும் தெரிவிக்க வேண்டும். உதவித் தொகை கேட்புப் படிவத்தை முழுமையாகவும் உண்மையாகவும் நிரப்பி அனுப்ப வேண்டும். சில முக்கியத் தகவல்கள் நேரடியாகக் கேட்கப்படாமல் இருந்தாலும் படிவத்தில் குறிப்பிடவேண்டும். வாகனத்தைச் சரிசெய்யும் பணிமனையிலிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கைகயை வாங்கி அத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். காப்பீட்டுக் கழகத்தின் ஒப்புதல் கிடைத்ததும் வாகனத்தைச் சீர் செய்யலாம்.

## பத்து மதிப்பெண் வினா - விடைகள்

**1. பாதசாரிகளுக்கான பாதுகாப்பு விதிகளை விளக்குக.**

நடைபாதைகளில் நடந்து செல்லாமல் சாலைகளில் நடந்து செல்லும் போதும், சாலையின் குறுக்கே திடீரெனக் கடக்க முயலும்போதும், காவலர் காட்டும் அல்லது சாலை கட்டுப்பாட்டு விளக்குகள் காட்டும் சமிக்ஞைகளை அலட்சியப்படுத்திவிட்டுச் செல்லும்போதும் பெரும்பாலான விபத்துக்கள் நடக்கின்றன.

நடைபாதைகள் உள்ள இடங்களில் அதன்மீதே நடந்து செல்ல வேண்டும். நடைபாதை இல்லாத இடங்களில் சாலையின் இடப்பக்க ஓரத்தில் நடந்துசெல்வதே பாதுகாப்பானது. எதிரில் வரும் வானங்களை நன்றாகக் கவனித்து தேவைப்பட்டால் ஒதுங்கிச் செல்ல இது உதவும். நடைபாதைகள் உள்ள இடங்களைத்தவிர சாலைகளிலோ, மிதிவண்டி பாதைகளிலோ நடந்து செல்லக்கூடாது. நடைபாதைகளில் பலர் ஒன்றாக நின்று பேசிக்கொண்டிருப்பது போன்ற செயல்களால் போக்குவரத்திற்கு இடையூறு விளைவிக்கக்கூடாது.

போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள சாலைகளில் பரவலாகப் பலர் ஒன்றாகச் சேர்ந்தோ, கை கோர்த்துக்கொண்டோ நடக்கக்கூடாது. இப்படிச் செய்வதால் போக்குவரத்திற்கு இடையூறு நேருவதுடன், விபத்துக்களும் நேரலாம். வாகன ஓட்டிகள் காணவியலாத திருப்பங்களில் எப்போதும் நிற்கக்கூடாது.

அசையாமல் நின்றுகொண்டிருக்கும் வாகனத்தின் பின்புறமிருந்து சாலையைக் கடக்காதீர்கள். இவ்வாறு கடக்கையில் எதிரில் வரும் வாகன ஓட்டிக்கு நீங்கள் வருவது குறித்த நேரத்தில் தெரியாததால் வாகனத்தை நிறுத்த முடியாமல் விபத்து நேரலாம்.

சாலையில் செல்லுகின்ற வாகனத்தின் பின்புறமாக நடப்பவர், மறுபுறமாகச் செல்லும் வாகனங்களைப் பார்க்க தனக்கு வாய்ப்பிருக்கும் வகையில் வாகனத்தின் அருகில் நெருங்கி நடக்காமல் அதிலிருந்து சிறிது தூர இடைவெளியில் நடக்க வேண்டும். ஊர்திகள், கார்கள் போன்ற வாகனங்கள் பின்னாலும், மாட்டுவண்டி, குதிரைவண்டி போன்றவை பின்னும் நெருக்கமாக நிற்பது ஆபத்தானது. ஏனெனில், நாம் எதிர்பாராத நேரத்தில் அவை பின்புறம் நகர்ந்து விபத்தை ஏற்படுத்தலாம். வழுக்கும் சாலைகள் ஆபத்தானவை. மழைக்காலங்களில் கவனமாகக் கால்வைத்து நடக்க வேண்டும்.

நகர சாலைகளில் பாதசாரிகள், சாலையை கடப்பதற்காகப் போடப்பட்டுள்ள வரிக்குதிரை கோடிட்ட இடங்கள், மேம்பாலங்கள், சுரங்கப்பாதை ஆகிய இடங்களிலேயே சாலையைக் கடந்து செல்ல வேண்டும். விளக்கு சமிக்ஞைகள் உள்ள இடமாக இருந்தால் பச்சை ஒளி விளக்கு (மனிதன்) எரியும்போதே கடந்து செல்ல வேண்டும். சாலையின் குறுக்கே செல்லும்போது அதன் நடுப்பாகம்வரை வலது புறமும், நடுப்பாகத்தைக் கடந்ததும் இடப்புறமும் பார்த்தவாறே கடக்க வேண்டும். நடைபாதையிலிருந்து இறங்கி தெருவில் செல்வதற்கு முன் வலப்புறமாகப் பார்த்த பின்னரே செல்ல வேண்டும். வரிக்குதிரை கோடிட்ட இடத்தில், கடந்து செல்லலாம் என்பதற்கான விளக்கு சைகை கிடைத்தபிறகு உடனே விரைவாகச் சாலையைக் கடந்து சென்றுவிட வேண்டும். சாலையின் மத்தியில் நின்று கொண்டோ, இருபுறமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டோ இருக்கக்கூடாது.

கார்கள், மோட்டார் சைக்கிள்கள் போன்றவற்றில் சென் கொண்டிருக்கும் நண்பர்களைத் தூரத்திலிருந்து குரல் எழுப்பியோ, எ தட்டியோ அழைக்காதீர்கள். இவ்வாறு செய்தால் அவரது கவனம் சித விபத்து நேர வழி வகுக்கும்.

முச்சந்தியில் நின்றிருக்கும் போக்குவரத்துக் காவலரி முன்புறமாகச் சாலையில் சென்றால் மட்டுமே அவரால் நாம் வருவதை கவனித்து, நமக்கு உதவ முடியும். எனவே போக்குவரத்துக் காவலரி பின்புறமாகச் செல்வதையும், சாலையைக் கடப்பதையும் தவிர்க்க வேண்டு

ஒரு பிராணியை உங்கள் வசம் வைத்திருந்தால் அது உங்க கட்டுப்பாடிற்கு மீறாமல் இருக்குமாறு பார்த்துக் கொள்ளுங்கள். ஒ பிராணியின் மீது வாகனம் மோதாமலிருப்பதற்காக ஓட்டுநர் வாகனத்தை வேறு பக்கம் திருப்ப, அதன் விளைவாக விபத்துக்கள் நேர்ந்து அதனா பலர் இறக்க நேரிடுவது உண்டு.

### குழந்தைகளும் சாலை பாதுகாப்பும்

குழந்தைகளுடன் அல்லது குழந்தைகள் சாலையைப் பயன்படுத் கையில் அதிக கவனத்துடன் இருப்பது அவசியம். சாலை விதிகளை அறியாத அவர்களால் பல விபத்துக்கள் நேருகின்றன. உங்கள் குழந்தை களுக்கும், உங்களைச் சார்ந்தோரின் குழந்தைகளுக்கும் விபத்து நேர இடமின்றி, சாலைகளைப் பயன்படுத்தும் முறைகளைக் கற்றுக்கொடுங்கள். வெளியில் அவர்களை உலவ (Walking) அழைத்துச் செல்லும்போதும், சாலைகளில் அழைத்துச் செல்லும்போதும் அந்தந்த இடங்களில் அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைக்ள் குறித்து வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் விளக்கம் அளியுங்கள். சாலையைக் கடக்கும் முறைகள், போக்குவரத்துக் காவலர் காட்டும் சைகைகள், சாலைகளில் உள்ள அறிவிப்பு பலகைகள் ஆகியவை குறித்து அவர்களுக்கு எடுத்துக் கூறுங்கள். சாலை விதிகளைப் பின்பற்றுவதில் நீங்களே அவர்களுக்கு ஒரு உதாரணமாக இருங்கள். குழந்தைகளைப் போக்குவரத்து உள்ள இடங்களில் விளையாட அனுமதியாதீர்கள். சாலையில் நீங்கள் இடப்புறமாகச் செல்கையில், குழந்தையை உங்களுக்கு இடப்புறமாகக் கையைப் பிடித்துச் சாலையில் அழைத்துச் செல்வதே பாதுகாப்பானது. அதேபோல சாலையின் வலப்புறமாக நடந்தால் குழந்தையை உங்களுக்கு வலப்புறமாக இருக்குமாறு அழைத்து செல்லுங்கள். ஐந்துவயதிற்கு குறைவான குழந்தைகள் சாலையில் தாங்கள் சந்திக்கும் ஆபத்தையோ, வாகனங்களின் வேகத்திற்கும், இடைவெளிக்கும் இருக்கும் தொடர்பையோ

(Relation Between Speed and Distance) அறிந்திருக்கமாட்டார்கள். எனவே சாலையில் குழந்தையுடன் செல்லும்போது குறிப்பாக சாலையை கடக்கும்போது சிறு குழந்தையாக இருந்தால் தூக்கிச் செல்வதும், ஓரளவு வளர்ந்த குழந்தையாக இருந்தால் கையை கெட்டியாகப் பிடித்து அழைத்துச் செல்வதும் மிகவும் அவசியம்.

**உ. மிதிவண்டி ஓட்டுவோருக்கான விதிமுறைகளை விளக்குக.**

நகரங்களில், சாலைகளின் ஓரங்களில் மிதிவண்டி செல்வதற்கென தனிப் பாதைகள் அமைக்கப்பட்டிருக்கும்; அந்தப் பாதைகளில்தான் மிதிவண்டிகளை ஓட்டிச் செல்ல வேண்டும். சாலைகளில் பலர் பரவலாகப் பேசிக்கொண்டோ, ஒருவரோடொருவர் கைகோர்த்துக் கொண்டோ மிதிவண்டிகளில் செல்வது ஆபத்தை விளைவிக்கும், சாலையின் இடப்புறம் ஓரமாக ஒருவர்பின் ஒருவராகச் செல்ல வேண்டும். முன்னே செல்லும் மோட்டார் வாகனங்களைக் குறுகிய இடைவெளியுடன் பின்தொடர்வதோ, அவற்றைப் பிடித்துக்கொண்டு செல்வதோ கூடாது. மழைக் காலத்தில் கவனமாக ஓட்டுவது அவசியம். சக்கரங்கள் சறுக்கினால் விபத்து நேரலாம்.

திருப்பங்களில் சரியான சைகையைச் சரியான நேரத்தில் செய்ய வேண்டும். சரியான சைகை செய்யாமலோ, சைகை செய்து போதிய இடைவெளி தராமலோ திடீரெனத் திரும்புவது விபத்தையேற்படுத்தும். மிதிவண்டியில் இருவர் செல்வது அனுமதிக்கப்பட்டிருப்பினும், முன்புறம் ஒருவரை ஏற்றிச்செல்வது மிதிவண்டியைத் திருப்ப இடையூறாக இருப்பதுடன் சில சமயங்களில் நிலைதடுமாறவும் செய்யலாம்.

மிதிவண்டியின் தடை சாதனத்தையும் (Brake ) ஒலியெழுப்பும் மணியையும் சரியாகப் பராமரிக்க வேண்டும். மிதிவண்டியில் இரவு நேரங்களில் முன்னே வெளிச்சத்திற்கான விளக்கும், பின்புறம் சிவப்பு விளக்கு அல்லது சிவப்பு ஒளி பிரதிபலிப்பு கண்ணாடியும் (Reflector) பொருத்தப்பட்டிருப்பது அவசியம்.

ஒருவழிப்பாதை முறை மிதிவண்டி ஓட்டுவோருக்கும் பொருந்தும். விபத்துக்களைத் தடுக்க சாலைவிதிகளைச் சரியாகவும், தவறாமலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

உங்கள் குழந்தை சைக்கிள் ஓட்டவிரும்பினால் அவர்களின் உயரத்திற்கு ஏற்ற சைக்கிளை வாங்கிக் கொடுங்கள் (சைக்கிள் அதிக உயரமாக இருக்கக் கூடாது). சைக்கிளை அவ்வப்போது பரிசோதித்து பழுதில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். குழந்தை சைக்கிள் ஓட்டும் போது யாரேனும் ஒருவர் உடன் செல்வது அவசியம்.

**3. வாகன ஓட்டிகள் சாலையில் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான விதிமுறைகளை விளக்குக.**

வாகன ஓட்டிகள் தங்கள் வாகனங்களைச் சரியான கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். வாகனத்தை ஓட்டத் துவங்கும் முன் டயர்களையும், தடைச்சாதனங்களையும் சரியான நிலையில் இருக்கின்றனவா எனச் சோதிக்க வேண்டும். வாகனத்தில் சிறிது பழுது ஏற்பட்டாலும் அதை உடனே சரி செய்து கொள்ள வேண்டும். பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று அப்படியே விட்டுவிடக்கூடாது.

வாகனங்களை நிறுத்துவதற்கான இடங்களிலிருந்தோ, சாலையின் ஓரங்களில் இருந்தோ வண்டியை வெளியே எடுக்கும் போது நிதானமாக செலுத்தும் பாதையில் வாகனங்கள் வரவில்லையென்பதை நிச்சயித்துக்கொண்டு, வலப்புறம் திரும்புவதற்கான சைகையைக் கொடுத்த வண்ணம் வாகனத்தைச் செலுத்த வேண்டும். வண்டியை நேர் பின்னால் செலுத்தி பின்னால் வரும் வாகனங்கள் திடீரென நிற்கச் செய்யக்கூடாது.

வாகனத்தைச் செலுத்தத் துவங்கும்போது முதல் கியரில் ஓட்டத்துவங்கி போக்குவரத்து நிலைக்கேற்ப படிப்படியாக அதிகரிக்க வேண்டும். முதல், இரண்டாம் கியரில் அதிக தூரம் வாகனத்தை ஓட்டுவதையும், அடிக்கடி கியரை மாற்றுவதையும் தவிர்க்கவேண்டும்.

முன்னால் செல்லும் வாகனத்தை முந்தும்போது தவிர ஏனைய நேரங்களில் சாலையின் இடப்புறமாகவே வாகனத்தை ஓட்டிச்செல்ல வேண்டும்; சாலையின் மத்தியில் வாகனத்தை ஓட்டிச்செல்லக்கூடாது. பெரிய நகரங்களில் போக்குவரத்து தடங்கள் (Traffic Lane) இருக்குமிடங்களில் மெதுவாகச் செல்லும் வாகனங்கள், வேகமாகச் செல்லும் வாகனங்கள், வேகமாகச் செல்லும் வாகனங்களுக்கு வலப்புறமாக வழிவிட்டு, இடப்புறத்தில் செல்ல வேண்டும். போக்குவரத்து திட்டுகள் (Traffic Islands) இருந்தாலும், இல்லாவிட்டாலும் வலப்பக்கமாக திரும்பவேண்டும் என்றால், சாலையின் குறுக்காகவோ, சாலையின் மையத்திலோ திரும்பாமல் இடப்புறம் சென்றே திரும்ப வேண்டும்.

வாகனத்தின் நிலை, சாலையின் நிலை, காலநிலை, சாலையில் போக்குவரத்து நிலை இவற்றிற்கேற்ப செல்லும் வேகத்தை நிச்சயித்துக் கொள்ள வேண்டும். தேவைப்பட்டால் மேற்கண்ட நிலைகளுக்கு ஏற்ப கியர்களை வேகமாகக் குறைத்து வேகத்தைக் குறைக்க வேண்டும். அவசரமான நிலைகளில் வாகனத்தை நிறுத்த வேண்டியிருந்தால், முதலில் வேகமாக 4, 3, 2, 1 என கியர்களைக் குறைத்து, பின்புறம் வரும்

வாகனங்களைக் காட்டும் கண்ணாடியைப் பார்த்து நிற்பதற்கான சைகை செய்து பின்னர் நிற்க வேண்டும். வாகனத்தை ஓட்டுகையில் சாலைக் குறியீடுகளையும், எச்சரிக்கைப் பலகைகளையும் கவனித்து ஓட்ட வேண்டும். எக்காரணத்தைக்கொண்டும் வேகத்தடை எச்சரிக்கைகளையோ, போக்குவரத்து காவல் துறையினரின் சைகைகளையோ மீறக்கூடாது.

முன்னால் செல்லும் வாகனத்திற்கும் உங்கள் வாகனத்திற்குமிடையே நீங்கள் செல்லும் வேகத்திற்கேற்ப 15 கி.மீ. வேகத்திற்கு ஒரு வாகன இடைவெளி என்ற அடிப்படையில் இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். உதாரணமாக, நீங்கள் செல்லும் வேகம் 60 கிலோ மீட்டராக இருந்தால், நான்கு வாகன இடைவெளி இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். விரைவுப் பேருந்துகளைப் பின் தொடர்கையில் குறைந்தது 10 மீட்டர் இடைவெளி இருக்க வேண்டும்.

முன்னே செல்லும் வாகனம், பாதசாரிகள், கால்நடைகள் ஒதுங்கி வழிவிட ஏதுவாக ஒலி எழுப்பி, சிறிதுநேரம் இடைவெளி தந்தபின்பே முந்திச் செல்ல வேண்டும். இரவில் வாகனம் ஓட்டும்போது முன்னால் செல்லும் வாகனத்தை முந்தவேண்டுமானால், ஒலி எழுப்பி வழி பெற முயல்வதைவிட விளக்கு சைகை மூலம் எளிதாக வழி கிடைக்கப் பெற்று முந்திச் செல்லலாம். பின்னால் வரும் வாகனங்கள் வழிகேட்டு சமிக்ஞை செய்தால் வழிவிடுங்கள்.

பள்ளிகள், பேருந்து நிற்கும் இடங்கள், பாதசாரிகள், சாலையைக் கடக்கும் இடங்கள் ஆகியவற்றினருகே செல்லுகையில் மெதுவாகவும், கவனமாகவும் செல்லவேண்டும்.

13 / 25

சாலையில் வளைத்து வளைத்து வாகனத்தை ஓட்டாதீர்கள். நகரச்சாலைகளில் அல்லது நெடுஞ்சாலைகளில் செல்லும்போது நீங்கள் செல்லும் தடத்தில் இருந்து அடுத்த தடத்திற்குத் தாவாதீர்கள்.

**4. நகரங்களில் வாகனம் ஓட்டும் முறையினை விளக்குக.**

நகரங்களில் ஒரு தடத்திலிருந்து மற்றொரு தடத்திற்கு மாற விரும்பினால், அதற்கான சைகையைக் காட்டி, போதிய கால இடைவெளி தந்து பின்வரும் வாகனங்களுக்குத் தொல்லை தராத வகையில்தான் மாற வேண்டும். சாலை சந்திப்புகள் அல்லது திரும்பும் இடங்களை அணுகும்போது அந்த இடங்களுக்கு 50 மீட்டர் முன்பே நாம் சரியான தடத்தில் செல்கிறோமா? என்பதை உறுதிசெய்து கொள்ள வேண்டும்.

சாலைச் சந்திப்புகளிலோ அல்லது திரும்புமிடங்களிலோ நின் செல்லும்போது நிற்கும் இடத்திற்கு 30 மீட்டர்கள் முன்பே இதற்கு சைகை செய்ய வேண்டும்.

நகரசாலைகளில் பாதசாரிகள் கடக்கும் இடங்களில் வரிக்குதி கோடுகள் போடப்பட்டிருக்கும். இதுபோன்ற இடங்களில் நிற்கும் சை காட்டப்பட்டால் வரிக்குதிரை கோடுகளுக்கு முன்னால் போடப்பட்டு ஒற்றை அல்லது இரட்டை கோடுகளுக்கு முன்னால் நிற்க வேண் (நிற்க என சாலையில் எழுதப்பட்டும் இருக்கலாம்). வரிக்குதிரை கோட் மேல் வாகனத்தை நிறுத்தக்கூடாது.

பாதசாரிகள் கடக்கும் இடங்கள், சாலை சந்திப்புகள், சா திருப்பங்கள், மலைப்பாதை, பாலங்கள், குறுகியசாலைகள், முந்த த செய்யப்பட்ட இடங்கள் ஆகிய இடங்களில் முன்னால் செல் வாகனத்தை முந்தக்கூடாது.

உங்களின் வாகனத்திற்கு முன்னால் வாகனங்கள் எவையே நின்றிருந்தாலோ, தடைகள் ஏதேனும் இருந்தாலோ எதிரில் வ வாகனத்திற்கு வழிவிட்டு அவை சென்ற பிறகே செல்ல வேண்டும்.

நின்றுகொண்டிருக்கும் வாகனத்தை முந்தும்போது அதிலிரு யாரேனும் இறங்குகிறார்களா? என்பதை கவனித்து முந்த வேண் நின்று கொண்டிருக்கும் வாகனத்தின் புகைகுழாயிலிருந்து திடீ புகை (அதிகம்) வந்தால் அது கிளம்பக்கூடும். அதற்கேற்ப வாகனத் செலுத்த வேண்டும்.



வாகனத்தை ஓட்டும்போது முழுகவனமும் சாலையின் மீதும், வா ஓட்டுதலின் மீதும் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள். வாக ஓட்டும்போது பேசுவதையும், விவாதிப்பதையும் தவிருங்கள்.

பூனை, நாய் போன்ற வீட்டு விலங்குகள் சாலையின் குறுக் ஓடிவந்தால் நாய் போன்றவையோ, சிறு குழந்தைகளோ அவற் துரத்திக்கொண்டு வர வாய்ப்புண்டு. எனவே, இதுபோன்ற நேரங்க கவனமாகச் செல்வது அவசியம்.

வாகனங்களை ஓட்டிக்கொண்டிருக்கும்போது உங்கள் கவ முழுதும் சாலையிலும், சாலையின் இருபுறங்களிலும், வாகனத் ஓட்டுவது தொடர்பானவற்றிலும் மட்டும் இருக்குமாறு பார்த் கொள்ளுங்கள். உங்கள் கவனத்தைத் திசை திருப்பும்வகையில் அரு இருப்பவரிடம் பேசிக்கொண்டோ, வர்ணனைகள், பேச்சுக்கள், விவாதங்

ஆகியவற்றைக் கேட்டுக்கொண்டோ வாகனத்தை ஓட்டாதீர்கள். வாகனத்தை ஓட்டும்போது உணர்ச்சி வசப்படவோ, மனக்கட்டுப்பாட்டை இழக்கவோ செய்யாதீர்கள்.

**வாகனங்களுக்கு வழிவிடுதல்**

தீயணைப்புப் படைவாகனம், நோயாளிகளை ஏற்றிச்செல்லும் வாகனம் (ஆம்புலன்ஸ்), செஞ்சிலுவை வாகனங்கள், காவல்துறை வாகனங்கள் போன்றவை முந்திச் செல்ல வழிகேட்டால் அவற்றிற்கு வழிவிட்டு இடப்புறமாக ஒதுங்கவேண்டும்.

ஒரு சிறிய சாலை பிரதான சாலையுடன் இணையுமிடத்தில் 'நிற்கவும்' என்ற அறிவிப்புப் பலகையோ. 'நின்று கவனித்தபின் போகவும்' என்ற அறிவிப்புப் பலகையோ காணப்படும். சிறிய சாலையிலிருந்து பிரதான சாலைக்குள் பிரவேசிக்கும் வாகனங்கள் நின்று பிரதான சாலையில் வரும் வண்டிக்கு வழிவிட்டு, பின்னரே செல்ல வேண்டும். சிறிய சாலையிலிருந்து பிரதான சாலையின் வலப்புறமாகச் செல்லவேண்டிருப்பின் கிளைச்சாலையின் இடதுபுறமாக வந்து, பின்னர் பிரதான சாலையில் இடப்புறமாக வந்துகொண்டிருக்கும் வண்டிக்கு வழிவிட்டபின்பே பிரதான சாலையின் ஓட்டத்தில் கலக்க வேண்டும்.

**5. சாலை சந்திப்புக்களும் வாகனங்கள் கடக்கும் முறைகளும் குறித்து கட்டுரைக்க.**

சாலை சந்திப்புகளில் வாகன ஓட்டிகள் அதிகக் கவனத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இதுபோன்ற இடங்களில் வாகனங்கள் வலப்புறமாக திரும்பும் சமயங்களில்தான் பெரும்பாலான விபத்துக்கள் நேருகின்றன. பிரதான சாலையில் செல்லும் ஒரு வாகனம் வலப்புறமாக உள்ள ஒரு சிறிய சாலைக்கும் அல்லது ஒரு கட்டிடச் சுவருக்குள் திரும்பவேண்டுமானால் பிரதான சாலையில் மையக்கோட்டிற்கு அருகில் நேராக நின்று, வலப்புறம் திரும்புவதற்கான அடையாளத்தைக் காட்டிய பிறகு உடனடியாகத் திரும்பிவிடவேண்டும்.

மையக்கோட்டினருகில் வண்டியைக் கோணலாக நிறுத்துவதோ, திடீரெனக் குறுக்கே ஓட்டுவதோ அபாயகரமானது. அதேபோல சாலையின் இடப்புறத்தில் உள்ள கட்டிடங்களிலிருந்து வெளியில் வந்து வலப்புறமாகச் செல்ல வேண்டிய வாகனங்கள், இடப்புறமாகவே சிறிது தூரம் சென்று பாதுகாப்பான நிலையில் வலப்புறமாகத் திரும்ப வேண்டும்.

சாலை சந்திப்புக்களைக் கடக்கும்போது வேகத்தைக் குறைத்து, பிரதான சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிட்ட பின்னரே

செல்ல வேண்டும். இல்லையெனில் உங்களுக்கு வலப்புறமாகச் செல்லும் வாகனங்களுக்கு வழிவிட்ட பின்பே செல்ல வேண்டும். "நின்று செல்லவும்" அல்லது "நின்று கவனித்து (பின்னர்) செல்லவும்" என்ற எச்சரிக்கைப் பலகைகளிருந்தால் நின்று, கவனித்து, பத்திரமாகச் செல்ல இயலும் என உறுதிப்படுத்திக் கொண்ட பிறகே செல்ல வேண்டும்.

சாலைத்திட்டு (Traffic Island), சாலை சந்திப்பு, வலது அல்லது இடது பக்கங்கள் திரும்புமிடங்களை நெருங்கும்போது முதலில் வேகத்தைக் குறைக்க வேண்டும். சாலைத் திட்டைச் சுற்றிச் செல்லத் துவங்கும் முன்போ அல்லது வலது, இடது பக்கங்களில் திரும்பும் முன்போ, முதல், இரண்டாம் கியருக்கு வந்து வட்டப்பாதையைச் சுற்றி முடித்ததும் அல்லது வலது, இடப் பக்கங்களில் திரும்பியதும், படிப்படியாகக் கியரை அதிகரித்துச் செல்ல வேண்டும். திரும்பும்போது அல்லது வட்டப்பாதையில் சுற்றும்போது கியரை மாற்றக்கூடாது.

**சாலை சந்திப்புகளில் திரும்புதல்**

பெரிய சாலை சந்திப்புகளில் சாலைத்திட்டுக்கள் இருக்கும். சில சாலை சந்திப்புகளில் சாலை திட்டு இல்லாமல் இருக்கலாம். சந்திப்புகளில் திட்டு இல்லாமல் இருந்தாலும் சாலைத் திட்டு இருப்பதாக கருத்திற் கொண்டு வாகனத்தை செலுத்த வேண்டும். சாலைத் திட்டு இல்லை என்பதற்காக சந்திப்பின் குறுக்கே வாகனத்தை செலுத்தக்கூடாது.

**சாலை சந்திப்பில் இடப்புறமாக திரும்புதல் : (படம் - 1)**

சாலை சந்திப்பை நெருங்கும் முன்பே இடதுபக்கம் திரும்புவதற்கான சைகையை செய்ய வேண்டும். சந்திப்பை நெருங்கியதும் வேகத்தைக் குறைக்க வேண்டும். சாலையின் இடப்புறம் நோக்கிச் செல்ல வேண்டும். எதிரிலும், உங்களின் வலப்புறமும் வாகனம் ஏதாவது வருகிறதா என்பதை கவனிக்க வேண்டும். பிறகு இப்புறமாக திரும்ப வேண் [illegible] சிகள் சாலையைக் கடந்துகொண்டிருந்தால் அவர்களுக்கு வ [illegible] ள் சென்ற பிறகு) வாகனத்தை செலுத்த வேண்டும். இடப்புற [illegible] தும் சாலையின் வலப்புறத்திற்கோ, மையத்திலோ செல்லாமல் சாலையின் இடப்புறமாகவே வாகனத்தை செலுத்த வேண்டும். திரும்பும்போது கியர்களை மாற்றக்கூடாது. சாலை திட்டில் அல்லது சாலை சந்திப்பில் போக்குவரத்து காவலரோ அல்லது போக்குவரத்து கட்டுப்பாட்டு விளக்குகளோ இருந்தால் அவர்கள் அல்லது அவைகள் அளிக்கும் சைகைகளுக்கு ஏற்ப வாகனத்தை செலுத்த வேண்டும்.

## ாலை சந்திப்பில் வலப்புறம் திரும்புதல்

சாலை சந்திப்பை நெருங்கும் முன்பே வலப்பக்கம் திரும்பும் ஃசகையை செய்ய வேண்டும். வேகத்தை குறைக்க வேண்டும். பின்னால் ரும் வாகனத்தை கவனிக்க உதவும் கண்ணாடியில் உங்களுக்கு லதுபுறம் வாகனங்கள் வரும் நிலையை கவனிக்க வேண்டும். பிறகு ாலையின் மையப்பகுதிக்கு சென்று, சாலை மையக்கோட்டின் இடப்புறம் ற்க வேண்டும். உங்களுக்கு இட, வலப்புறங்களிலும், முன்பும் வரும் ாகனங்களை கவனிக்க வேண்டும். பாதுகாப்பாக திரும்ப முடியும் என றுதிப்படுத்திக் கொண்டு வலப்புறமாக சாலைத் திட்டைச் சுற்றிக் காண்டு திரும்ப வேண்டும். திருப்பத்தில் கியர்களை மாற்றக் கூடாது.

## ிரு சக்கர வாகனம் சாலை சந்திப்பில் வலப்புறம் திரும்புதல்

சாலை சந்திப்பை நெருங்கும் முன் முதலில் பின்னால் வாகனம் தாவது வருகிறதா என்பதை கவனிக்க வேண்டும். பிறகு வலப்புறம் ரும்புவதற்கான சைகையை செய்ய வேண்டும். பின்னர் சாலையின் மயக்கோட்டிற்கு இடப்புறமாக வாகனத்தை ஓட்டி செல்ல வேண்டும். ாலை சந்திப்பினுள் நுழையும் முன்னால் அவசியம் மீண்டும் ஒரு முறை லப்புறம் திரும்புவதற்கான சைகையை செய்யவேண்டும். தலையை திருப்பி ன்புறம் ஒருமுறை பார்க்க வேண்டும். சாலையின் மையக் கோட்டை ட்டியே சாலை சந்திப்பின் மையம் வரை சென்று வலப்புறம் ரும்பவேண்டும். வலப்புறம் திரும்பிய பின் நுழையும் சாலையில் இடப்புற ாமாகவே செல்ல வேண்டும்.

## ாலை சந்திப்பைக் கடந்து நேராக செல்லுதல்

சாலை சந்திப்பை அடையும் வரை எந்த சைகையும் செய்யக்கூடாது. ாலை சந்திப்பில் இடபுறமிருந்தும், வலப்புறமிருந்தும் வாகனங்கள் வையேனும் வருகின்றனவா? என கவனிக்க வேண்டும். அவ்வாறு ாகனங்கள் எவையும் வரவில்லை, பாதுகாப்பாக கடக்க இயலு றுதி செய்து கொண்டபிறகு தொடர்ந்து செல்ல வேண்டும். ட்டின் பாதியை கடந்ததும் இடப்புறம் திரும்புவதற்கான சைகையை சய்ய வேண்டும். சாலை சந்திப்பில் போக்குவரத்து காவலர் அல்லது ாக்குவரத்து கட்டுப்பாட்டு விளக்கு இருந்தால் அவர் காட்டும் அல்லது வை காட்டும் சைகைக்கு ஏற்ப செயல்படவேண்டும்.

## ாலை சந்திப்பில் வாகனங்களுக்கு வழிவிடுதல்

இடப்புறம் சென்று கொண்டிருக்கும் வாகனம் தனக்கு எதிர்புறம் ருந்துவரும் அல்லது தனது வலப்புறமிருந்துவரும் வாகனத்திற்கு ழிவிட்டு அவை சென்ற பின்பே செல்ல வேண்டும்

பக்க சாலையில் இருந்து வரும் வாகனங்கள் பிரதான சாலையில் செல்லும் வாகனங்களுக்கு வழிவிட்டு அவை சென்ற பிறகே செல்ல வேண்டும்.

**நின்று கொண்டிருக்கும் வாகனத்தை முந்துதல்**

உங்களுக்குப் பின்புறம் வாகனங்கள் வருகின்றனவா? என்பதை கவனிக்க வேண்டும். முன்னதாகவே சைகை செய்ய வேண்டும். நின்று கொண்டிருக்கும் வாகனத்தை நெருங்கும் முன்பிருந்தே வலப்புறமாக மையக் கோட்டை ஒட்டிச் செல்ல வேண்டும். பிறகு நின்றிருக்கும் வாகனத்தைக் கடந்து செல்ல வேண்டும். நின்றிருக்கும் வாகனம் திடீரென முன்னோக்கியோ, பின்னோக்கியோ செல்லலாம். எனவே கவனத்துடன் கடக்க வேண்டும்.

**6. இரவில் வாகனம் ஓட்டும் முறையினை விளக்கி வரைக.**

பொதுவாக, தெளிவாக சாலையும், சாலையிலும் அதன் ஓரங்களிலும் உள்ள பொருட்கள் தெரியாமலிருப்பது எதிரில் வரும் வாகனங்களின் பிரதான விளக்குகள் வெளிச்சத்தால் கண் கூசுவது, சாலையில் உள்ள ஒளி பிரதிபலிக்காத பொருட்களைக் காண இயலாமல் போவது போன்ற காரணங்களால் இரவில் வாகனங்களை ஓட்டுவது கடினமாகின்றது. இரவில் வாகனங்களை ஓட்டுகையில் விபத்து நேராமல் தடுக்க கீழ்க்கண்ட முறைகளைக் கடைபிடிப்பது அவசியம்.

i) சூரிய அஸ்தமனத்திற்கு ஒன்றரை மணி நேரத்திற்குப் பின்னிருந்து சூரிய உதயத்திற்கு ஒன்றரை மணிநேரம் வரையுள்ள நேரத்தில் வாகனத்தை ஓட்டுகையில் பிரதான விளக்குகளை (Head Lights) எரியவிட வேண்டும்.

ii) எதிரில் வரும் வாகனத்தின் விளக்கு வெளிச்சம் தெரிந்ததும் உங்கள் வாகனத்தின் வெளிச்சத்தைக் குறைத்து பின்பு அகிகரிக்க வேண்டும் அல்லது விளக்குகளை அணைத்து, பின் [illegible]ம். இவ்வாறு செய்வதால் எதிரில் வரும் வாகன ஓட்டி உ[illegible]தை எளிதாகக் காண முடியும். எதிரில் வருபவரின் கண்ணைக் கூசாமல் இருக்கவும் இது உதவும்.

பிரதான விளக்குகளின் வெளிச்சம் பகல் வெளிச்சத்தைவிடக் குறைவானது என்பதுடன் சாலையின் இருபுறங்களிலும் உள்ளவற்றையும் அவ்வளவு தெளிவாகக் காண இயலாது என்பதால் இரவில் வேகமாகச்

செல்லாதீர்கள். உங்கள் வாகனத்தில் உள்ள விளக்கின் ஒளியால் ஒரு பொருளை அல்லது வாகனத்தைப் பார்த்தபின்பு உங்கள் வாகனத்தை நிறுத்த தேவையான இடைவெளி கிடைக்கும் அளவில் நீங்கள் செல்லும் வேகம் குறைவாக இருப்பது அவசியம்.

நகரங்கள், பெருநகரங்கள் ஆகிவற்றில் உள்ள வெளிச்சம் நிறைந்த சாலைகளிலும் தெருக்களிலும் குறைந்த செளிச்சமுள்ள விளக்கையே பயன்படுத்த வேண்டும். பெரும் நகரங்களில் சில இடங்களில் பிரதான விளக்கினைப் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டிருக்கும்; அதுபோன்ற இடங்களில் பிரதான விளக்குகளைப் பயன்படுத்தக் கூடாது. வெளிச்சம் இல்லாத அல்லது வெளிச்சம் மிகக் குறைவாக உள்ள தெருக்களிலும், நெடுஞ்சாலைகளிலும் செல்லும்போது வெளிச்சம் மிகுந்த பிரதான விளக்கைப் பயன்படுத்த வேண்டும். நெடுஞ்சாலைகளில் செல்லும்போது 560 அடி தூரத்தில் எதிரில் வாகனங்கள் வரும்போது பிரதான விளக்கில் உள்ள அதிக வெளிச்சத்திற்கான பல்பையும், இடையில் உள்ள தூரம் 200 அடியும், அதற்குக் குறைவாகவும் ஆகும்போது குறைந்த வெளிச்சத்திற்கான பல்பையும் பயன்படுத்த வேண்டும்.

எதிரில் வரும் வாகனத்தின் பிரகாசமான விளக்கால் உங்கள் கண்கள் கூசுமானால் நேரடியாக அவ்விளக்குகளைப் பார்ப்பதைத் தவிர்த்து எதிரில் உள்ள சாலையின் இருபுறங்களையும் பாருங்கள். இவ்வாறு செய்வதன்மூலம் எதிரில் வரும் வாகனத்தின் நிலையை அறியலாம்.

இரவில் உறக்கம், களைப்பு மிகுந்த நிலையில் வாகனத்தை ஓட்டாதீர்கள். வாகனத்தின் பின்புறம் சிவப்பு விளக்கு எரிவதை உறுதிப் படுத்திக்கொள்ளுங்கள். வாகனத்தைத் திருப்பும்போதும், நிறுத்தும்போதும் ஒளி சமிக்ஞை செய்யுங்கள்.

இரவில் வாகனத்தைச் சாலையில் நிறுத்திவிட்டுச் செல்ல நேர்ந்தால், முன்புறம் அதற்கான சிறு விளக்குகளையும், (Parking Lights) பின்புறம் சிவப்பு விளக்குகளையும் எரியும்படி செய்யுங்கள்.

**7. மழை, மோசமான கால நிலையில் வாகன** 
A55 **எவ்வாறு ஓட்டுதல் வேண்டும் என்பதை வி[illegible]க.**

மழை பெய்துகொண்டிருக்கும்போது குறிப்பாக பலத்த காற்றுடன் மழை பெய்துகொண்டிருக்கும்போது வாகனத்தை ஓட்டுவது ஆபத்தானதாகும். மழையின் காரணமாகவும், கண்ணாடியில் நீர்த்திவலைகள இருப்பதன் காரணமாகவும் எதிரில் உள்ள

வாகனங்களைத் தெளிவாகப் பார்க்க முடியாது. சாலையில் வழுக்கும் வாய்ப்பு அதிகம். பலத்த மழையால் சாலையில் நீர் உள்ளபோது, வாகனத்தின் சக்கரங்கள் நீர் சறுக்கு விளையாட்டில் பலகை சறுக்கிச் செல்வதுபோல வாகனத்தின் சக்கரங்கள் செல்லும். இவ்வாறு மணிக்கு 80 கிலோ மீட்டர் வேகம் செல்லும்போது சாலைக்கும், சக்கரங்களுக்கும் எந்தத் தொடர்பும் இருக்காது. இதுபோன்ற நேரங்களில் வாகனத்தைத் திருப்பினாலோ அல்லது காற்று பலமாக வீசினாலோகூட சாலையில் சக்கரங்கள் வழுக்கி, வாகனம் கவிழும் அபாயம் உண்டு. மழையில் வாகனங்கள் ஓட்டுகையில் விபத்தைத் தடுக்க கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

i) பலத்த மழை, புயலுடன் கூடிய மழை இருக்கையில் வாகனம் ஓட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.

ii) மழை பெய்யத் துவங்கியதும் சாலையில் உள்ள எண்ணெய்ப்பசை போன்ற பொருட்கள் மழை நீருடன் கலந்து சாலை வழுக்கலாம். எனவே, மழை பெய்யத்துவங்கி அரைமணி நேரம் வரை வாகனங்களை ஓட்டுவதைத் தவிர்ப்பது நல்லது.

iii) மழை பெய்யும்போது வாகனத்தை மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டவேண்டும். இரண்டாம் கியரிலேயே செல்வது நல்லது. வேகமாகத் தடையைப் (பிரேக்கை) பயன்படுத்தாதீர்கள்.

iv) முன்னால் செல்லும் வாகனத்திற்கும், உங்கள் வாகனத்திற்கும் இடையேயுள்ள இடைவெளி சாதாரண நேரங்களைப்போல இரண்டு மடங்கு இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

v) தூறல் விழத் துவங்கியதும் காரின் முன் கண்ணாடியில் உள்ள துடைப்பானை இயங்கச்செய்தால் கண்ணாடியில் உள்ள மண், தூசி போன்றவை அதில் பசைபோல பூசிக்கொள்ள ஏதுவாகும். எனவே, மழை துவங்கி ஓரிரு நிமிடங்களுக்குப் பிறகே துடைப்பானை இயக்கவேண்டும்.

vi) இயன்றவரை தடையை (பிரேக்கை)ப் பயன்ப[illegible]தையும், வேகமாகத் திரும்புவதையும் தவிர்ப்பது நல்லது. [illegible]ச் சாலையில் சரியான பிடிப்பு கிடைக்கும் வரை [illegible]ம் வளையத்தை (ஸ்டேரிங்கை) வலுவாகப் பற்றியிருப்பது நல்லது.

ஓடிக்கொண்டிருக்கும் இடத்தில் வாகனத்தை ஓட்டிச்செல்வதைத் தவிர்ப்பது நல்லது. இவ்வாறு செய்கையில் என்ஜின் போன்ற முக்கியப் பாகங்களில் நீர் புகுந்து வண்டிக்கு அதிக சேதத்தை ஏற்படுத்தலாம். நீர் உள்ள இடத்தில் நின்றுகொண்டு இருக்கும் கார்கள், மற்ற பொருட்கள் உள்ள நிலையைக் கொண்டும், சாலையில் மற்ற வாகனங்கள் செல்கின்றனவா? என்பதையும் கருத்திற்கொண்டு முடிவு செய்ய வேண்டும்.

viii) நான்கு சக்கர அல்லது கனரக வாகனங்களில் இதுபோன்ற இடங்களில் செல்லும்போது எல்லாச் சக்கரங்களும் கூடிய மட்டிலும் நீரிலில்லாமல் ஒரு பக்க சக்கரங்களாவது நீரில்லாத அல்லது நீர் அதிகமில்லாத இடத்திலிருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும்; நீரின் அலைகளால் வாகனத்தின் நிலை பாதிக்கப்படாமலிருக்க இது உதவும்.

ix) நீர் தேங்கியுள்ள இடத்தில் செல்லும்போது மெதுவாகவும், ஒரே சீரான வேகத்திலும் செல்லவேண்டும். தடையை உபயோகிக்க வேண்டியிருந்தால் மெதுவாகவும், சீராகவும் இயக்கவேண்டும்.

x) நீர் தேங்கிய இடத்திலிருந்து வெளியே வந்ததும் தடைகள் (பிரேக்குகள்) மென்மையாகவும், ஒரே சீராகவும் இயங்குகின்றனவா? என்பதைச் சரிபார்க்கவேண்டும். அவை ஈரமாக இருந்தால் தடை இறுக்கமாக இருக்கலாம் அல்லது ஒரு பக்கமாக இழுக்கக்கூடும்; எனவே தடைகளை உலரச் செய்ய வேண்டும்.

**பனிமூட்டம், பனிப்பொழிவு**

பனிமூட்டம் நிறைந்த நேரங்களில் வாகனத்தை ஓட்டிச்செல்கையில் வாகனத்தின் விளக்கொளி பனிமூட்டத்தில் பட்டு, பிரதிபலித்து நமது கண்ணையே கூசச்செய்யும். பிரதான விளக்கின் ஒளி குறைவான பல்பையே பயன்படுத்த வேண்டும். சாலையின் விளிம்புகளைப் பார்க்க வேண்டும். பத்திரமான பயணத்திற்கு அது வழி வகுக்கும். விளக்குகளைப் பயன்படுத்தினாலும் பனிமூட்டம் காரணமாகச் சாலையில் உள்ளவற்றைத் தெளிவாகக் காண இயலாமலும், முன்னேயுள்ள வாகனத்திற்கும், உங்கள் வாகனத்திற்கும் உள்ள இடைவெளியைச் சரியாக நிர்ணயிக்க இயலாமலும் இருக்கும். எனவே, மெதுவாகவே செல்லவேண்டும். நீங்கள் செல்லும் சாலையில் பனிமூட்டத்தின் அடர்த்தி இடத்திற்கு இடம் மாறுபடலாம்.

ஓட்டாமலிருப்பது நல்லது.

பனிப்பொழிவு உள்ளபோதும் சாலை சரியாகத் தெரியாது. எனவே, பிரதான விளக்கைப் பயன்படுத்த வேண்டும். சாலையில் உள்ள குறியீடுகளைப் பனி அடிக்கடி மறைக்கலாம். அதனால் வாகன ஓட்டி சாலையின் ஓரங்களைத் தாண்டியோ, பிற வாகனங்களுக்கு நெருக்கமாகவோ வாகனத்தை ஓட்ட நேரலாம்.

திரும்பவும், நிற்கவும் பயன்படும் நேரம் அதிகமாக இருக்கும். சாலைக்கும், சக்கரங்களுக்கும் இடையே உள்ள பனி உடனே வாகனத்தை நிறுத்த இயலாது செய்யும். சாலை வழுக்கக்கூடும். எனவே, மிகுந்த கவனத்துடன் செல்ல வேண்டும்.

**வேகம் விவேகம் அல்ல**

எவ்வளவு வேகம் செல்லலாம் என்பது இடத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுபடும். நெடுஞ்சாலையில் அனுமதிக்கப்பட்ட வேகத்தில் கிராம சாலைகளில் செல்லக்கூடாது. சாலையில் செல்லும் வேகத்தில் நகர; கிராம எல்லைக்குள் செல்லக்கூடாது. நெரிசல், போக்குவரத்து, குறுகிய பாலங்கள், பள்ளிகள், சாலை சந்திப்புகள், பயணிகள் கடக்கும் இடங்கள் போன்ற இடங்களில் மெதுவாகவே செல்ல வேண்டும்.

நெரிசல் நிறைந்த நகரங்களில் வேகமாக வாகனங்களை ஓட்டிச்செல்வது விபத்துக்களையும், அதன் கடுமையையும் அதிகரிக்கும். அப்படி வேகமாகச் செல்வதால் நிறைய நேரத்தை மிச்சப்படுத்த முடியுமா? இல்லை என்பதே உண்மை. சென்னை போன்ற பெருநகரங்களில் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு நிதானமாகச் செல்வதற்குப் பதில், வேகமாகச் சென்றால் மூன்று அல்லது ஐந்து நிமிடங்கள்தான் மிச்சப்படும். ஐந்து நிமிடங்களை மிச்சப்படுத்த உயிரைப் பணயம் வைப்பது அறிவுடமையாகாது.

கரடுமுரடான சாலைகளிலும், சாலைத்தடைகள் உள்ள இடங்களிலும், ரயில் பாதைகளைக் கடக்கையிலும் வேகத்தைக் குறைத்து விழிப்புணர்வுடன் செல்லவேண்டும். வேகமாகச் சென்றால் வண்டியைக் கட்டுப்படுத்துவது கடினம். இரு சக்கர வாகனங்களில் செல்வோர் மேற்குறிப்பிட்ட இடங்களில் அதிகக் கவனத்துடன் செல்ல வேண்டும்.

தானியங்கி சைகைகளில் மஞ்சளிலிருந்து பச்சை வருவதற்குள் உறுமிக்கொண்டு எரியத் தொடங்கும் முன் சென்றுவிடலாம் என்று மிக வேகமாகச் செல்லும்போதும் நிறையப் பேர் விபத்திற்கு உள்ளாகிறார்கள்.

**8. தடைசாதனம் இயங்காமல் போகும்போது (Brake Failure) மேற்கொள்ள வேண்டியனவற்றை விளக்குக.**

தடைசாதனங்கள் இயங்காவிட்டால் உடனே கீழ்க்கண்ட முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

அ) வேகமாகவும், முழு பலத்துடனும் தடைகட்டையை (Brake Pedal) அழுத்தவேண்டும். இவ்வாறு செய்வது வேகத்தைக் குறைக்க அல்லது வாகனத்தை நிறுத்த உதவும். பவர் பிரேக்காக இருந்தால் இவ்வாறு மூன்றுமுறை அழுத்துவது அதை மீண்டும் இயங்கச் செய்யும்.

ஆ) கியர்கள் 4, 3, 2, 1 என்று குறைத்துக்கொண்டே வரவேண்டும்.

இ) வாகனத்தை நிறுத்திவிட்டுச் செல்கையில் பயன்படுத்தும் கை தடையை மெதுவாகப் பயன்படுத்த வேண்டும். ஆனால், வாகனம் வழுக்கும் (கவிழும்) நிலை ஏற்பட்டால் உடனே அத்தடையை நீக்கத் தயாராக இருக்க வேண்டும்.

ஈ) வேகத்தைக் குறைக்க ஏதுவான இடம் நோக்கியோ, யாருமில்லாத திறந்த வெளியை நோக்கியோ (அத்தகைய இடமிருந்தால்) வண்டியைத் திருப்ப வேண்டும்.

உ) வாகனத்தை நிறுத்தி இறங்கிய பிறகு தடையைச் சரி செய்யாமல் மீண்டும் அதை ஓட்டக்கூடாது.

ஊ) நீண்ட தூர மலைச்சாலைப் பயணம் போன்றவை மேற்கொள்ளும் போது தொடர்ந்து தடைக்கட்டையை அழுத்திக் கொண்டிருந்தால் தடைகள் தளர்ந்தோ, இயங்காமலோ போகலாம். எனவே, இதுபோன்ற பயணங்களில் தடைகளைத் தொடர்ந்து பயன்படுத்தாமல் வேகத்தைக் குறைக்க குறைந்த கியர்களுக்கு மாறுவது நல்லது.

**வாகனங்களை நிறுத்துதல்**

சாலையின் இடப்புற ஓரங்களில்தான் வாகனங்கள் நிறுத்தப் படவேண்டும். வாகனங்களை நிறுத்துவதற்கான கோடிடப்பட்ட இடங்களில் கோடுகளுக்கு உள்ளேயே நிறுத்தவேண்டும். பேருந்து நிற்குமிடம்,

22/25

வாடகை வாகனங்கள் நிற்குமிடம் போன்ற இடங்களில் வாகனங்களை நிறுத்தக்கூடாது. வாகனங்களை நிறுத்திவிட்டுச் செல்லும்போது கைத்தடையைப் போட்டுவிட்டு, இன்ஜின் நிறுத்தப்பட்டுள்ளதா என்பதை பரிசோதித்துவிட்டு வண்டியின் கதவுகளையும் பூட்டிவிட்டுச் செல்ல வேண்டும்.

9. மதுவும் - வாகனம் ஓட்டுதலும் - குறித்து விளக்குக.

மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுவதும், மது அருந்துபவரை ஓட்ட அனுமதிப்பதும் சட்டப்படி குற்றங்களாகும்.

மது அருந்திய ஒருவருக்குப் போதையேறும் முன்பே கண்பார்வை பாதிக்கப்படுகிறது. குடித்துவிட்டு வாகனங்களை ஓட்டும்போது கண் வேலைசெய்யும் திறமையில் 32 விழுக்காட்டை இழந்துவிடுகிறது எனக் கண்டறியப்பட்டிருக்கின்றது. ஆங்கில கண் மருத்துவர் ஒருவரின் ஆய்வு முடிவுப்படி குடித்த சில நிமிடங்களுக்குள் ஓரக்கண்ணால் பார்க்கும் திறமை மிகவும் குறைந்துவிடுகிறது என்பது கண்டறியப்பட்டிருக்கிறது. இதனால் சாலையின் இரு புறங்களிலும் பார்வையைச் செலுத்த முடிவதில்லை.

மதுவில் உள்ள ஆல்கஹாலை இரத்தம் கிரகித்துக் கொண்டபின் உடனடியாகப் பாதிக்கப்படுவது கண் பார்வையை இயக்கும் நரம்புகள்தான். சாதாரண சமயங்களில் எதிரே வந்துகொண்டிருக்கும் வாகனங்களையும், சாலையின் இரு புறங்களிலும் நடந்து சென்றுகொண்டிருக்கும் பாதசாரிகளையும் கண்கள் இமைப்பொழுதில் பதிவு செய்து மூளைக்குச் செய்தியாக அனுப்புகின்றன. அதனால்தான் நாம் வாகனம் ஓட்டிக் கொண்டு இருக்கும்போது எதிர்பாராத வகையில் பாதசாரி ஒருவர் சாலையின் குறுக்கே புகுந்தாலும், எதிர்பாராத குறுக்கீட்டைக் கண் பதிவு செய்து அந்தச் செய்தியை நொடிப்பொழுதில் மூளைக்கு அனுப்பிவிடும். மூளை உடனே கட்டளைகளைப் பிறப்பிக்க கால்கள் நடையை அழுத்தி வாகனத்தை நிறுத்தவும், கைகள் திருப்பும் சக்கரத்தை (ஸ்டேரிங்கை) திருப்பிப் பாதசாரிமேல் படாமல் பார்த்துக்கொள்கின்றன. இவை அனைத்தும் சில வினாடிகளில் நடந்துவிடும். ஆனால், மது அருந்தியிருந்தால் இந்தப் பணிகள் முறையாகவும், விரைவாகவும் நடப்பதில்லை. திடீரென ஒருவர் சாலையின் குறுக்கே வந்தால் கண்கள் இந்தச் செய்தியை மூளைக்கு அனுப்பிவைக்க அதிகநேரம் எடுத்துக்கொள்கின்றன. இதனால், கால்களுக்கு மூளை கட்டளை இடுவதற்குள் குறுக்கே வரும் மனிதர்மீது வாகனம் மோதி விபத்து ஏற்பட்டு விடுகிறது.



குறைவாகக் குடித்துவிட்டு வாகனம் ஓட்டினால் அதிக பாதிப்பு இருக்காது எனச் சிலர் கருதுகிறார்கள். இந்தக் கருத்தும் தவறானதே. அதிகம் குடித்தால் அதிகநேரம் போதை இருக்கும் என்பதைத் தவிர, குறைவாகக் குடித்திருந்தாலும், அதிகமாகக் குடித்திருந்தாலும் குடித்ததும் வாகனம் ஓட்டும்போது ஏற்படும் விளைவு ஒரே மாதிரியாகவே இருக்கும். எனவே, மது அருந்தி இருந்தால் வாகனம் ஓட்டாதீர்கள். வாகனம் ஓட்டுவதாக இருந்தால் மது அருந்தாதீர்கள்.

10. விபத்துக்கள் நேரும்போது மேற்கொள்ள வேண்டிய பணிகளை விளக்குக.

விபத்தைச் சந்திக்க நேரும்போது அல்லது விபத்து நேர்ந்திருப்பதைக் காணும்போது என்ன செய்யவேண்டும் என்பதைப் பார்ப்போம். விபத்து நேருகையில் நமது பொறுப்புக்களை அடிப்படையாகக் கொண்டு விபத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். 1. விபத்தால் பிறர் பாதிக்கப்பட்டிருப்பதைக் காணும்போது நமது கடமைகள்; 2. நமது வாகனம் விபத்திற்கு உள்ளாகும்போது நாம் செய்யவேண்டியவை 3. நமது வாகனத்தால் பிறர் பாதிக்கப்பட்டிருந்தால் செய்ய வேண்டியவை.

அ) விபத்தில் பிறர் பாதிக்கப்பட்டிருப்பதைக் காண நேரும்போது

விபத்து நேர்ந்திருப்பதைக் காணும்போது நம்மில் பெரும்பாலோர் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கிறார்கள். அல்லது நமக்கு ஏன் வீண் வம்பு என்று கருதி கண்டுங்காணாததுபோல ஒதுங்கிச் சென்று விடுகிறார்கள்; இது ஒரு மனிதாபிமானமற்ற செயல். இதுபோன்ற நேரங்களில் பாதிக்கப்பட்டவருக்கு முதலுதவி அளிப்பதும், சரியான மருத்துவ உதவி கிடைக்கச் செய்வதும் அவர்களின் உயிர், உறுப்பு இழப்புக்களைத் தவிர்க்க உதவும். உடனடியாக அருகில் உள்ள காவல் நிலையத்திற்குத் தெரிவிப்பது விபத்தில் பாதிக்கப்பட்டவரின் உடமைகளைக் காக்கவும், சரியான சாட்சிகளின் உதவியால் தவறு செய்தோர் உரிய தண்டனை பெறவும், குற்றமற்றவர்களைத் தவறாகத் தண்டிக்கப்படுவதிலிருந்து காக்கவும் உதவும்.

எலும்பு முறிவு போன்றவை ஏற்பட்டிருந்தால் விபத்திற்குள்ளானவரை இருந்த இடத்திலிருந்து அசைக்கவோ, தூக்கவோ முயலக்கூடாது. சரியான வாகனவசதி செய்த பின்னரே அவரை மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லவேண்டும்.

பாதிக்கப்பட்டவருக்கு இரத்தப்பெருக்கு ஏற்பட்டிருந்தால் அந்த இடத்தை விரலால் அழுத்தவேண்டும். இரத்தப்பெருக்கு அதிகமாக இருந்தால் இரத்... வரும் இடத்திற்குமேல் துணி, கயிறு போன்றவற்றால் இறுக்கமாக கட்டவேண்டும். (இவ்வாறு அதிகநேரம் கட்டி வைக்கக்கூடாது).

பாதிக்கப்பட்டவர் அதிர்ச்சிக்கு ஆளாகி இருந்தால் அவரது முக... வெளிறி காணப்படும். நாடித்துடிப்பு வேகமாக இருக்கும். கடுமையா... அதிர்ச்சி சில நோய்களில் மரணத்திற்கு வழிவகுக்கக்கூடும். எனவே அதிர்ச்சிக்கான முதல் உதவியளிப்பது அவசியம். அவரு... உடைகளைத் தளர்த்தவேண்டும். கால், தலையைவிட ஒரு அடி உயரம... இருக்குமாறு அவரைப் படுக்கவைக்க வேண்டும். (தலையில் இரத்த... பெருக்கு இருந்தால் இவ்வாறு செய்யக்கூடாது). குடிக்க சூடான பான... ஏதேனும் கொடுக்கலாம். இரத்தப்பெருக்கு இருந்தால் சூடாக எதுவ... கொடுக்கக் கூடாது. பாதிக்கப்பட்டவருக்கு தைரியமூட்டுவதும் அவசிய...

பாதிக்கப்பட்டவருக்கு மூச்சோ, இதயத்துடிப்போ அல்லது இரண்டுமோ நின்று போயிருக்கலாம். அவ்வாறு நேர்ந்திருந்தா... அதற்கான முதலுதவிகளைச் செய்யவேண்டும்.

**ஆ) செயற்கை மூச்சூட்டுதல்**

மூச்சுவிடுவது நின்றுபோயிருந்தால் பாதிக்கப்பட்டவரை தலையை சாய்த்தாற்போல் இருக்குமாறு படுக்கவைக்க வேண்டும். மூக்கிலும், வாயிலு... சளி போன்றவை இருந்தால் அவற்றைத் துடைத்து அகற்றவேண்டு... பின்னர் பாதிக்கப்பட்டவரை மல்லாக்காகப் படுக்க வைத்து அவரது வாயி... வாயை வைத்து பலமாக ஊதவேண்டும். இவ்வாறு ஊதும்போ... பாதிக்கப்பட்டவரின் மூக்கை அழுத்திப் பிடித்துக்கொள்ள வேண்டு... ஊதுவதால் உள்ளே செல்லும் காற்று நுரையீரலை அடைந்து அத... விரிவடையச் செய்யும். இதனால் மார்பு உயர்வதைக் காணலாம். பின்ன... ஊதுபவர் வாயை எடுத்துக் கொள்ளவேண்டும். மார்பு இறங்கும்போ... பாதிக்கப்பட்டவரின் நுரையீரலிலிருந்து காற்று வெளியேறும். பின்ன... முன்புபோல வாயில் ஊதவேண்டும். இவ்வாறு நிமிடத்திற்கு 12 முறை ஊதவேண்டும். குழந்தையாக இருந்தால் மூக்கிலும், வாயிலும் மாற்றி மாற்றி நிமிடத்திற்கு 30 முறை ஊத வேண்டும்.

**இ) இதயத்தை இயங்கச்செய்தல்**

இதயத்தின் இயக்கம் நின்றுவிட்டிருந்தால் அதை இயங்கச் செய... முதலும் முன் இதயம் நின்றுவிட்டதா? என்பதைத் திட்டவட்டமா... அறிந்துகொள்ளவேண்டும். நாடித்துடிப்பும், மூச்சோட்டமும் நின்றுபோ...



இருப்பதைக்கொண்டோ, மார்பில் காதை வைத்துப் பார்த்தால் இதயஒலி கேட்காமல் இருப்பதைக்கொண்டோ இதை நிச்சயிக்கலாம். இதயம் நின்றுவிட்டது என நிச்சயமானால் சிறிதும் தாமதிக்காமல் அதை இயங்கச் செய்யவேண்டும்.

ஒரு உறுதியான நிலப்பரப்பில் பாதிக்கப்பட்டவரை மல்லாக்காகக் கிடத்தி முதலுதவி அளிப்பவர் தனது வலது உள்ளங்கையைப் பாதிக்கப்பட்டவரின் மூன்றாவது நெஞ்சு எலும்பின்மீது வைத்து ஒவ்வொரு முறையும் 3.75 செ.மீ. அழுந்துமாறு நெஞ்செலும்பை நிமிடத்திற்கு 60 முதல் 80 முறை வரை அழுத்திவிடவேண்டும். இவ்வாறு செய்தால் 10, 12 நிமிடங்களில் இதயம் துடிக்கத் துவங்கிவிடும். சில நோய்களில் பல நிமிடங்கள் இவ்வாறு தொடர்ந்து செய்யவேண்டியிருக்கும்.

பொதுவாக, இதயத்தை இயங்கச் செய்வது, மூச்சோட்டம் ஏற்படுத்துவது இரண்டையுமே ஒரே நேரத்தில் செய்யவேண்டியிருக்கும். ஒருவர் மட்டும் முதலுதவி அளிக்கையில் இரண்டு முறை நுரையீரலில் (வாயில்) ஊதிவிட்டு 15 முறை இதயத்தைப் பலமாக அழுத்திவிட வேண்டும். முதலுதவி செய்யுமிடத்தில் இருவர் இருந்தால், ஒருவர் விநாடிக்கொருமுறை வீதம் 5 முறை இதயத்தை அழுத்திவிடவும். மற்றவர் நுரையீரலில் ஒருமுறை ஊதவும்வேண்டும்.

**ஈ) உங்கள் வாகனம் விபத்திற்குள்ளானால்**

விபத்து நேர்ந்ததும் பயந்துவிடக்கூடாது. வண்டியைத் தனியாக விட்டுச்செல்லாமல் அதற்குக் காவலாக ஒருவரை நிறுத்தவேண்டும். காவல்துறையினர் அனுமதிக்கும் வரை வாகனத்தை அங்கிருந்து அகற்றக்கூடாது.

விபத்தில் வாகனத்தில் இருப்போருக்கோ, மற்றவர்களுக்கோ காயமோ, மரணமோ, சொத்து சேதமோ ஏற்பட்டிருந்தால் விபத்து நேர்ந்த 24 மணிநேரத்திற்குள் அருகில் உள்ள காவல் நிலையத்தில் காப்பீட்டு (இன்சூரன்ஸ்) சான்றுகளுடன் தெரிவிக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்களுக்கு முதலுதவி செய்யவும் சரியான மருத்துவ உதவி கிடைக்கவும் வழி செய்யவேண்டும்.

எந்தப்பக்கமும் சாராத இரண்டு சாட்சிகளின் பெயர், முகவரிகளைக் குறித்துக்கொள்ளவேண்டும். விபத்து நடந்த காட்சியின் வரைபடத்தை வரைந்துகொள்ள வேண்டும். விபத்து நடக்கும் முன் வரிசையாய் நடந்த நிகழ்ச்சிகளைக் குறித்தும் கொள்ளவேண்டும்.

வேறொரு வாகனத்துடன் மோதியிருந்தால் அதன் ஓட்டுநரின் பெயர், முகவரி, வாகனத்தின் பதிவு எண் போன்றவற்றையும், வாகனத்தின் உரிமையாளரின் பெயர், முகவரி, காப்பீடு செய்திருப்பதும் தொடர்பான விவரங்களையும் குறித்துக் கொள்ளவேண்டும்.

வாகனம் காப்பீடு (இன்சூரன்ஸ்) செய்யப்பட்டிருந்தால் அதைச் சீ செய்யும் செலவையும், வாகனத்தைப் பணிமனைக்கு எடுத்துச் சென்று திரும்பவும் ஆகின்ற தொகையையும் காப்பீட்டு நிறுவனம் ஏற்கு மிகக்குறைந்த சேதமாக இருந்தால் காப்பீட்டு நிறுவனத்திடம் செலவை கேட்காமலிருப்பதே நல்லது. ஏனெனில், உதவித் தொகை பெறுவதற்கா ஊக்குவிப்புத்தொகை கிடைக்காமல் போய்விடும். சேதம் அதிகமா இருந்தால் காப்பீட்டு நிறுவனத்திடம் உடனே தெரிவிக்கவேண்டும். சந்த (பாலிசி) எண்ணையும், பிற விவரங்ககளையும் தெரிவிக்க வேண்டு உதவித்தொகை கேட்புப் படிவத்தை முழுமையாகவும், உண்மையாகவு நிரப்பி அனுப்பவேண்டும். சில முக்கியத் தகவல்கள் நேரடியாகக் கேட்கப்படாமல் இருந்தாலும் படிவத்தில் குறிப்பிடவேண்டும். வாகனத்தை சரிசெய்யும் பணிமனையிலிருந்து ஒரு மதிப்பீட்டு அறிக்கையை வாங்கி அத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். காப்பீட்டுக் கழகத்தின் ஒப்புத கிடைத்ததும் வாகனத்தைச் சீர் செய்யலாம்.

**உ) உங்கள் வாகனத்தால் மற்றவர்கள் பாதிக்கப்பட்டிருந்தால்**

விபத்து நேர்ந்ததும் பயப்படவோ, பதட்டப்படவோ கூடாது. எவருக்கேனும் காயமோ, மரணமோ, சொத்து சேதமோ ஏற்பட்டிருந்தால் 24 மணி நேரத்திற்குள் அருகில் உள்ள காவல்நிலையத்திற்குத் தெரிவிக்க வேண்டும். உங்கள் வாகனத்தின் பதிவு புத்தகம் (ஆர்.சி.புத்தகம்) ஓட்டுநரின் உரிமம் (லைசென்ஸ்) ஆகியவற்றையும், காப்பீட்டு ஆவணங்களையும் அவர்களிடம் காட்ட வேண்டும்.

காயமுற்றவர்களுக்கு முதலுதவி செய்யவும், உடனே மருத்துவ உதவி கிடைக்கச் செய்யவும் வேண்டும். இவ்வளவு தொகை ஈடாகக் கொடுப்பேன் என பாதிக்கப்பட்டவரிடமோ, ஏனையோரிடமோ கூறாதீர்கள். நீதிமன்றத்தில் சாட்சி சொல்லத் தயாராக இருக்கும் இருவரின் வாக்குமூலங்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

காப்பீட்டு நிறுவனத்திற்கு விபத்து பற்றிய விவரங்களை முழுமையாகத் தெரிவியுங்கள். உதவி கேட்கும் படிவத்தை நிரப்பி அனுப்புங்கள். உங்கள் வாகனத்தின் பதிவுச் சான்றையும், ஓட்டுநர் உரிமத்தையும் சரிபார்க்க அனுப்புங்கள்.

காவல் துறையினரால் உங்கள் மீது வழக்கு தொடரப்பட்டால் தற்காப்பு செய்துகொண்டு, நடந்தவற்றைக் காப்பீட்டு நிறு தெரிவியுங்கள். விபத்து தொடர்பான அறிக்கைகள் (நோட்டீசுகள்), (சம்மன்கள்) ஆகியவற்றைக் காப்பீட்டு நிறுவனத்திற்கு அனுப்பினால் உங்களுக்காகத் தேவையான நடவடிக்கைகளை எடு